www.Padasalai.Net www.TrbTnpsc.com

**+1 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு மார்ச் -2024**

**சரியான விடை** **20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (அ) அமைப்புமுறை ஏடு | (ஈ) நேரடி வரி |
| 2. (ஈ) நேரடி வரி | (ஆ) வழிச்சீட்டு |
| 3. (ஆ) வியாபாரம் | (இ) 14 |
| 4. (ஆ) வழிச்சீட்டு | (ஆ) கிராம சேமிப்பு |
| 5. (ஆ) பன்னாட்டு வியாபாரம் | (இ) 51 % |
| 6. (இ) ஒப்பந்ததிற்கு மூன்றாம் நபர் | (அ) ரூ 2 லட்சம் |
| 7. (அ) ரூ 2 லட்சம் | (ஆ) மொத்த வியாபாரி |
| 8. (ஆ) மொத்த வியாபாரி | (அ) அமைப்புமுறை ஏடு |
| 9. (ஆ) ஒப்பந்தத்தால் | (ஆ) பன்னாட்டு வியாபாரம் |
| 10. (இ) நடைபாதை வியாபாரிகள் | (ஆ) வியாபாரம் |
| 11. (ஆ) கிராம சேமிப்பு | (ஆ) இராபர்ட் ஓவன் |
| 12. (இ) 51 % | (ஈ) **ii iv i iii** |
| 13. (அ) வழங்கல் | ஆ) ஒப்பந்தத்தால் |
| 14. (ஈ) அந்நிய செலவாணி மாற்று பத்திரம் | (ஈ) உரிமையாளர்கள் |
| 15. (ஈ) உரிமையாளர்கள் | (ஈ) செலவு குறைப்பு |
| 16. (ஈ) **ii iv i iii** | (அ) 3 |
| 17. (ஈ) செலவு குறைப்பு | (இ) ஒப்பந்ததிற்கு மூன்றாம் நபர் |
| 18. (அ) 3 | (அ) வழங்கல் |
| 19. (ஆ) இராபர்ட் ஓவன் | (இ) நடைபாதை வியாபாரிகள் |
| 20. (இ) 14 | (ஈ) அந்நிய செலவாணி மாற்று பத்திரம் |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. போக்குவரத்து வரையறு.** கே.கே.செக்சேனாவின் கூற்றுப்படி " ஓர் இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது"

**22. கூட்டுரு சாரா நிறுவனங்கள்:** தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்துக் கூட்டுக் குடும்பம்.

**23. நிறுமத்தின் ஏதேனும் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.** தனியான சட்ட நபர் தன்மையுடையது:- வரையறு பொறுப்பு:-

**24. பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.** பாட்டா, கோல்கேட் பாமொலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ்

**25. துறைவாரி அமைப்புகளின் தன்மைகள்** இறுதியான பொறுப்புகள், அரசின் நிதியுதவி:,- மேலாண்மை, சட்டவிலக்களிப்பு

**26. இருதரப்பு வாக்குறுதிகள்:** ஒரு நபர் தனது வாக்குறுதியை மற்றவரின் வாக்குறுதிகள் மறுபயனாக அளிக்கும் போது, அவ்விரு வாக்குறுதிகளும் இருதரப்பு வாக்குறுதிகள் என அழைக்கப்படுகின்றன.

**27. வாணிப சமநிலை** என்பது, ஒரு வருடத்தில் ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதியை விட, இறக்குமதி அளவு குறைவாக இருந்தால், அது சாதகமான வாணிபச் சமநிலையைக் காட்டுகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதியை விட, இறக்குமதி அளவு அதிகமாக இருந்தால், அது பாதகமான நிலையைக் காட்டுகிறது.

**28. சரக்காணையின் வகைகளை குறிப்பிடுக.** வெளிப்படை சரக்காணை, வரையறுக்கப்பட்ட சரக்காணை, உறுதி செய்யும் சரக்காணை

**29. உலகளாவிய வைப்பு இரசீது:** அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு இரசீது எனப்படும். இது அமெரிக்கா தவிர்த்து, பிற நாடுகளில் உள்ள வெளிநாட்டு பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது.

**30. தூய கடன்:** தூய / பிணையமற்ற கடன் என்பது எவ்விதமான பிணையங்களையும் ஈடாகப் பெறாமல் கடன் பெறுநரின் குணநலன்கள், திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் அவரின் செயல் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுவதாகும்.

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. வீட்டு வசதி கூட்டுறவு:** உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத்தரும் சங்கங்களே, வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் எனப்படுகின்றன.

சொந்தமாக வீடு கட்ட விரும்பும் நபர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.

இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் தந்து, அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன.

சில வீட்டுச் சங்கங்கள், மொத்தமாக காலி நிலங்களை வாங்கி வீடு கட்டி உறுப்பினர்களுக்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன.

வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**32. கப்பல் வாடகை ஒப்பாவணம்:** சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக் கொள்வது நல்லது.

எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பநதம் உருவாக்கப்படுகிறதோ அது "கப்பல் வாடகை ஒப்பாவணம்" என்று அழைக்கப்படும்.

மேலும் இது "பயண ஒப்பந்தம்" அல்லது "கால ஒப்பந்தம்" என்றும் அழைக்கப்படும்.

எந்த நபர் கப்பலை வாடகைக்கு எடுக்கிறாரோ அவர் "ஒப்பந்தக்காரர்" அல்லது சார்ட்டர் நபர் என்று அழைக்கப்படுகிறார்.

**33. தமிழ்நாட்டில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பட்டியலிடுக.** தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஏறத்தாழ அனைத்துப் பிரிவுகளிலும், பல்வேறு விதமான பொருட்களைத் தயாரிக்கின்றன.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.Trb Tnpsc.com

ஜவுளி, மின்னணு பொருட்கள், பொறியியல் பொருட்கள், தானியங்கி உதவிப் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயணம், நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்கள், ஆயத்த ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் முதலானவை.

**34. தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம்:** இது 2005 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்டது.
இந்த மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதிபரிமாற்ற நடவடிக்கைகள், தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன.
NEFT செயல்படுத்தப்பட்ட கிளை வங்கிகளில் கணக்குக்களைப் பராமரிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் NEFT முறையைப் பயன்படுத்தத் தகுதியுடையவையாகும்.
பரிவர்த்தனைகள் உண்மையான நேர அடிப்படையில் நடைபெறுவது இல்லை.
ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும், காலை 8.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி முடிய 23 தீர்வுகள் மட்டுமே ஒரு நாளில் அனுமதிக்கப்படுகின்றன.
NEFT பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவது இல்லை.

**35. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**
மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
இவர்கள் பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
சில்லறை வியாபாரிகளுக்கு இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
உற்பத்தியாளர்களுக்கும் இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
நகரங்கள், பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

**36.அடகு கடன்** கடன் பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார்.
கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை, அடகு வைக்கப்பட்ட பொருள், கடனாளரிடமே இருக்கும்.
கடனாளி, கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார்.
ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக் கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின் அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

**37. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் (3)**
ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
உள்நாட்டு உற்பத்தியாளர் நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.

**38. வணிகம் பொருள்:** பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

| **39.** அடிப்படை | **நேர்முக வரி** | **மறைமுக வரி** |
|---|---|---|
| **பொருள்** | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| **இயல்பு** | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| **வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம்** | ஒரு நபரையே சென்றடைகிறது. | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன. |
| **வகைகள்** | சொத்துவரி, வருமானவரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி. |
| **ஏய்ப்பு** | வரி வாய்ப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. | வரி ஏய்ப்பு காண வாய்ப்பு குறைவு |
| **பண வீக்கம்** | இது பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது. | இது பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |

www.Padasalai.Net


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**40. கப்பல் இரசீதின் முக்கிய உள்ளடக்கங்கள்:** ஏற்றுமதி செய்பவர் பெயர், கப்பல் பெயர், பொருட்களை ஏற்றும் இடம், கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களின் விவரங்கள், இறக்க வேண்டிய துறைமுகத்தின் பெயர், சரக்குகள் வழங்கப்படும் அல்லது செலுத்தப்பட வேண்டிய பொருட்கள், யாருக்காக பொருட்கள் ஏற்றப்பட்டதோ, தேதி வாரியாக ஒப்படைத்தல் போன்றவை அதில் இடம்பெற்றிருக்கும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள்**

**எளிமையான அமைப்பு:-** இதனை அமைப்பது எளிது, இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

**பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு:** இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும். அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

**இரகசியம் காத்தல்:-** பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவைகள் அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அத்துறைகளில் பணியாளர்கள் தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

**பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு:-** இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால் பொது மக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்.

**சமூக மாற்றத்திற்கான கருவி:-** அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை அரசுத் துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும். ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

**41.ஆ. ஏதேனும் நான்கு தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.**

**பொது வருங்கால வைப்பு நிதி:-** இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில் இது மிகப் பாதுகாப்பான நீண்ட கால முதலீட்டு வாய்ப்பாகும்.

**பரஸ்பர நிதிகள்:-**பரஸ்பர நிதி என்பது, நிதி நிறுமங்கள் பொது மக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.

**பொது வைப்புகள்:-**வங்கிகளில் நிலை வைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.

இதில் முதலீட்டாளர் முதலீட்டு கால அளவை மிக்க கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி:-** ULI என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும். இது காப்பீடு செய்பவருக்கு இழப்பை ஈடு செய்வதோடு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

**அஞ்சலக சேமிப்பு திட்டங்கள்:** 1. அஞ்சலக சேமிப்பு கணக்கு 2. அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு 3. அஞ்சலக நிலை வைப்பு கணக்கு 4. அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம் 5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்

| 42 அ. அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| **பொருள்** | இது ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | நாடுகளின் எல்லைகளைத் தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| **வியாபாரத்தில் பங்கு பெறுவோர்** | ஒரே நாட்டில் உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத் தாண்டி உள்ள மக்களும், நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| **வியாபார முறை** | ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| **பயன்படுத்தும் நாணய மதிப்பு** | உள்ளூர் நாணய மதிப்பில், வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | அயல்நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |
| **போக்குவரத்து** | இதில், சாலை மற்றும் இரயில் போக்குவரத்து மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | கப்பல் மற்றும் விமான போக்குவரத்து பயன்படுத்தப்படுகிறது. |

www.Padasalai.Net


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**42.ஆ. அந்நியச் செலாவணி மாற்று பத்திரத்தின் ஏதேனும் 5 சிறப்புச் கூறுகளை விவரி.**

இந்திய நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும் ஒரு வகை பத்திரம் ஆகும்.

கடனீட்டுப் பத்திரங்களைப் போல பட்டியலிடப்பட்டு, அயல்நாட்டு பங்கு மாற்றகங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.

இது மாற்றத்தக்க கடன் ஆவணமாகும். இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.

இதனை வைத்திருப்பவர்களுக்கு முன் குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக் கொள்ளவும் உரிமை தரப்படுகிறது,

குறிப்பிட்ட காலத்திற்கு பின் இவைகளை நேர்மை பங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக் கொள்ள முடியும்.

இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறி முறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.

**43.அ. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி**

**மிக்க நம்பிக்கை:-** இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.

காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**காப்பீடு பெறுநலன்:-** காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.

**ஈட்டுறுதி:-** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது.

**அண்மைக் காரணம்:-**ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.

காப்பீட்டு ஒப்பந்தத்தின் போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார்.

**பகிர்ந்தளித்தல்:-** ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைக் காப்பீடு" என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

**பகர உரிமை:-** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது. அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாடுக்கு எதிராக அமைந்துவிடும்.

**43.ஆ. வருமானம் என்ற சொல்லில் பின்வருவன அடங்கியுள்ளன.**

வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட லாபம் மற்றும் ஆதாயம்

பங்காதாயம்

தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெரும் நன்கொடைகள்.

ஊதியத்திற்கு மாற்றாக பெறும் இதர வருமானங்கள்.

ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறு விதமான ஊக்கத் தொகைகள்.

கூட்டாளி ஒருவர், கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெறும் வட்டி, ஊதியம். ஊக்கத் தொகை, கழிவு அல்லது மேல் வருமானம்.

மூலதன ஆதாயங்கள்.

தமது உறுப்பினர்களுடன் கூட்டுறவு சங்கமாக வங்கியில் வணிகத்தை மேற்கொண்டு, பெற்ற இலாபங்களும், ஆதாயங்களும்.

குதிரை பந்தயம், சீட்டு விளையாட்டுகள் மற்றும் அதே வகையான ஏனைய விளையாட்டுகள் உள்ளிட்ட பந்தயங்கள் குறுக்கெழுத்துப் போட்டிகள், பரிசுச் சீட்டுக்கள் ஆகியவற்றில் கிடைத்த பரிசுத் தொகைகள்.

கருதப்பட்ட வருமானங்கள்.

சேமநல நிதி அல்லது ஓய்வுகால நிதி போன்றவைகள் மூலமாக பெறப்பட்ட தொகை.

பிரதான காப்புறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடுதல் சிறப்புத் தொகை.

வியாபாரத்தோடு தொடர்பில்லாமல், ஏதேனும் செயலில் ஈடுபட்டு இருப்பின் அல்லது தொழில் நுட்ப அறிவு காப்புரிமை மற்றும் பதிப்புரிமை இவைகளைப் பகிர்ந்து கொள்ளாமல், ஏதேனும் தொகை எந்த ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பட்டிருந்தாலும்.

இயக்குனர்கள் அல்லது நிறுமத்தில் கணிசமான அக்கறை கொண்ட ஒரு நபர் அல்லது அவரது உறவினர் அல்லது இயக்குனர் ஒருவரின் உறவினர்


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.Trb Tnpsc.com

ஆகியோரால் நிறுமத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் பயன் அல்லது மேல் வருமானம்.

பிரிவு 56 (2) இன் படி பெறப்பட்ட நன்கொடைகள்.

**44.அ. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-** சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-**நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-**இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**44.ஆ.முத்ரா வங்கி:** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித்தேவைகளை பூர்த்தி செய்யவும், புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ரூ 20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ரூ 3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் 'குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை' (முத்ரா வங்கி) தொடங்கப்பட்டது.

குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தவும், தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவு படுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

**45.அ. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.**

நிறுவனத்தின் பெயர்

வணிகத்தின் தலைமையிடம்

பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்

அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி

ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும் முகவரி

கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக் கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்காணும் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

**45.ஆ. பெரு நிறுவன ஆளுகையின் நன்மைகள்:**

நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.

தொழில் வளர்ச்சியின் நிலையான நலன்களை சீரமைத்தல்.

பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைத்தல்.

முதலீட்டாளர்களின் மத்தியில், நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கச் செய்தல்.

நிறுமங்களுக்கான மூலதன செலவினை குறைக்கின்றன.

**46.அ. பன்னாட்டு நிறுமத்தின் தீமைகளை விவரி.**

**உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்:-** இதன் மிகப்பெரிய பொருளாதாரச் சக்தி, உள்நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்துகிறது. பல உள்நாட்டு நிறுவனங்கள், இவைகளால் அழிக்கப்படுகின்றன. நாட்டிற்குப் பொருளாதார வளர்ச்சியைத் தருவது போன்று தோற்றமளித்து, உள்ளூர் தொழில்களை அழிக்கின்றன. இச்செயல், "பசுத்தோல் போர்த்திய புலி" என்ற பழமொழியை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

**வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை மாற்றுதல்:-** வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை, வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம் நாடுகளில் தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்ற வாதம் தவறானவை.

**ஏழை மக்களுக்கு நன்மையில்லை:-** பணக்காரர்களால் மட்டுமே இந்நிறுவனங்களின் பொருட்களை வாங்க

www.Padasalai.Net


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

முடியும். ஏழை மக்களுக்கு இந்நிறுவனங்களால் எப்பயனும் இல்லை.

**உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு:-**உள்நாட்டு மக்களுக்காக கணிசமான அளவில் வேலை வாய்ப்பினை, பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கி தருவது இல்லை.

**உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு:-** உள்நாட்டு முதலீட்டினால் பன்னாட்டு நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டினாலும், உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை இவை புறக்கணிக்கின்றன.

**46.ஆ. உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக.**

**அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள்:-**எந்த ஒரு வங்கியின் பங்குகளில் 51 சதவீதத்திற்கும் குறைவில்லாத பங்குகளை அரசு பெற்றிருந்தால், அது அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**எகா:-** பாரத ஸ்டேட் வங்கி, இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கி

**பொதுக் கூட்டுரு வகை வங்கிகள்:-**ஒவ்வொரு பொதுக் கூட்டுரு வங்கியும், பாராளுமன்றத்தின் தனிச்சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழு சொந்தமானதாக உள்ளன.

**எகா:-** IFCI, SIDBI, EXIM வங்கி

**தனியார் துறை வணிக வங்கிகள்:-** தனி நபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வணிக வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன. அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும், அதன் உறுப்பினர்களான பொதுமக்களுக்குச் சொந்தமானவை. கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்.

| 47. அ. தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **உருவாக்கும் முறை:-** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டது. | சிறப்புத் தொழிலமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல் | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம். |
| **பணியின் தன்மை:-** சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல் | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியார்களுக்கு வழங்கிய செயலை செய்தல். |
| **தகுதி:-** குறைந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும், பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்ச தகுதி தேவை இல்லை. |
| **அடிப்படை நோக்கம்:-** சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து, இலாபம் ஈட்டுவது. | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன், கூலி, சம்பளம் பெறுதல். |
| **வெகுமதி:-** இலாபம் | தொழில் முறை கட்டணம் | கூலி, சம்பளம். |
| **இடர்:-** இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும நிலையானது. | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை. |
| **உரிமை மாற்றம்:-** சில நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |

| **47. ஆ. அடிப்படை** | **ஏட்டுக்கடன் முகமை** | **பன்னாட்டு ஏட்டுக்கடன் முகமை** |
|---|---|---|
| நிதிக்கான அடிப்படை | ஏற்றுமதியின் கடன் தரத்தின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது | வங்கியின் நிதித் தரத்தைப் பயன்படுத்தும் அளவின் அடிப்படையில் நிதிச் சேவை வழங்கப்படுகிறது. |
| கட்டணம் (அ) செலவு | சரக்கை விற்பவர் நிதிச் ச்சேவைக் கட்டணத்தை ஏற்றுக்கொள்கிறார் | அயல்நாட்டுக் கடனாளி நிதிச் சேவைக் கட்டணத்தை ஏற்றுக் கொள்கிறார் |
| பொருந்தும் காலம் | குறுகிய கால முதிர்வுக் கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் | மத்திய கால முதிர்வு கொண்ட நடவடிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் |
| நிதியின் அளவு . | பெறுதல்களின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட (அதிக அளவாக 80 விழுக்காடு) சதவீதம் மட்டுமே பேராளனாள் நிதி வகைப்படுகிறது. | பெறுதல்களின் மதிப்பு முழுவதும் (100 விழுக்காடு) பேராளன் நிதி வழங்கப்படுகிறது |
| இடர் ஏற்றல் | நிதிச் சேவையில் ஏற்படும் இடர்களை விற்பனையாளருக்கு மாற்றிவிட இயலும். | அனைத்து இடர்களையும் அயல்நாட்டு நிதி தரகு செய்யும் பேராளனே ஏற்றுக்கொள்கிறார் |

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com


kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com